இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 182 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – தை 29 – வியாழக்கிழமை 12 பிப்ரவரி 2026 – சென்னை 16 + 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 182 : Thiruvalluvar Year - 2057 - Thai 29 - Thursday 12 February 2026 - Chennai 16+16 Pages ₹ 5.00



தமிழ்நாட்டு மாணவர்கள் தரணியை வென்றிட

10,00,000 மடிக்கணினிகள் வழங்கும் திட்டம்

தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் ஒருவரையும் பின்தங்க விடமாட்டோம் !!



வெல்வோம் ஒன்றாக!

செ.ம.தொ.இ./179/வரைகலை/2026

## பா.ஜ.க.வின் பாசிச அரசியல் தமிழ்நாட்டில் எடுபடாது! 2026 சட்டமன்றத் தேர்தலிலும்

# தி.மு.க. கூட்டணியே மாபெரும் வெற்றி பெறும்!

## ‘இந்தியா டுடே’ தொலைக்காட்சிக் கருத்தரங்கில் முதல்வர் மு.க.ஸ்டாலின் திட்டவட்டம்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.2.2026) சென்னையில், INDIA TODAY சார்பில் நடைபெற்ற TAMIL NADU ROUND TABLE நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

**சென்னை, பிப். 12 - சென்னையில் ‘இந்தியா டுடே’ தொலைக்காட்சி சார்பில் நடைபெற்ற ‘தமிழ்நாடு ரவுண்ட் டேபிள்’ நிகழ்ச்சியில் உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “2026 சட்டமன்றத் தேர்தலிலும் தி.மு.க. கூட்டணியே மாபெரும் வெற்றி பெறும்” என்றும், “பா.ஜ.க,வின் பாசிச அரசியல் தமிழ்நாட்டில் எடுபடாது” என்றும் திட்டவட்டமாகக் கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.2.2026) சென்னையில், ‘INDIA TODAY’ சார்பில் நடைபெற்ற ‘TAMIL NADU ROUND TABLE’ நிகழ்ச்சி யில் கலந்து கொண்டு, ஆற்றிய உரை வருமாறு :-

தமிழ்நாடு டுடே எப்படி இருக்கிறது என்று பார்த்து, நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்ல வந்திருக்கக்கூடிய “இந்தியா டுடே”வின் இந்த நிகழ்ச்சியில் பங்கெடுப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்! பெருமைப்படுகிறேன்! தமிழ்நாட்டு மக்களின் மனதில் என்ன இருக்கிறது என்று இந்தியா டுடேவும் சி வோட்டர்ஸ் நிறுவனமும் நடத்திய சர்வேயில் தெளிவாக தெரிந்திருக்கும்! உங்கள் சர்வே படி, தி.மு.க. கூட்டணி 45 சதவிகிதம் ஆதரவோடு லீடிங்கில் இருக்கிறது!

எங்களுக்கும், Second Place இல் இருக்கக்கூடிய வித்தியாசத்தைப் பார்த்தீர்கள் என்றால், 12 சதவிகிதம். இங்கே பத்திரிக்கையாளர்கள், அரசியல் ஆர்வலர்கள் என்று பலரும் இருக்கிறீர்கள். உங்களுக்கே தெரியும்... Simple Arithmetic தான், மூன்று சதவிகிதம் வித்தியாசம் இருந்தாலே Clean Sweep தான்! 12 சதவிகிதம் என்றால், அது நிச்சயம் Thumping Victory தான்! அதில் எந்த மாற்றமும் இருக்காது. அதற்கென்று, நாங்கள் மெத்தனமாக இருக்க மாட்டோம்.

> ### துணிச்சல் எங்கிருந்து வந்தது?
>
> **தமிழ்நாட்டைப் போலவே, அஸ்ஸாமிலும் இப்போது தேர்தல் வரப்போகிறது. அதற்கு, அஸ்ஸாம் பி.ஜே.பி.யின் சோசியல் மீடியா பக்கங்களில் வீடியோக்களை வெளியிட்டு வருகிறார்கள். நீங்கள் எல்லோரும் பார்த்திருப்பீர்கள். அதில், அந்த மாநிலத்தைச் சார்ந்த ஆளும் பா.ஜ.க. முதலமைச்சர் துப்பாக்கியில் குறி வைப்பது போல போட்டிருந்தார்கள். அதுவும் யாருக்கு எதிராக? இப்படிப்பட்ட காட்சியை வைப்பதற்கான துணிச்சல் அவர்களுக்கு எங்கிருந்து வந்தது?**

### இந்த சர்வே ரிசல்ட் எங்களுக்கான பூஸ்ட்!

உங்களைப் பொறுத்தவரைக்கும், இந்த சர்வே ரிசல்ட், எங்களுக்கான பூஸ்ட்! அவ்வளவுதான். ஏனென்றால், தி.மு.க. என்பது, எப்போதும், என்றென்றும், மக்களுடன் இருக்கக்கூடிய இயக்கம்! மக்களுக்காக பாடுபடக்கூடிய இயக்கம்! அதனால், இன்னும் உற்சாகமாக உழைத்து, உங்களுடைய கணிப்பை உண்மையாக்குவோம்!

கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன்பு தமிழ்நாடு என்ன நிலைமையில் இருந்தது என்று இங்கே இருக்கின்ற எல்லோருக்கும் தெரியும். அதேசமயம், இப்போது திராவிட மாடல் அரசு அமைந்து இந்த ஐந்தாண்டுகளில் வரலாறு காணாத வெற்றிப் பாதையில் தமிழ்நாடு வெற்றி நடைபோட்டுக் கொண்டிருக்கிறது! வரும் தேர்தலில் வென்று, இந்த வளர்ச்சிப் பயணத்தை வெற்றிப் பயணத்தை திராவிட மாடல் 2.0விலும் தொடர்வோம்!

### ஒன்றிய அரசாலேயே மறைக்க முடியவில்லை!

**ஊடக நண்பர்கள் மற்றும் அரசியல் பார்வையாளர்களான உங்கள் முன்பு சில புள்ளிவிவரங்களை நான் முன்வைக்கிறேன். ஏனென்றால், Numbers Speak. Last Year, தமிழ்நாட்டின் Economic Growth எவ்வளவு என்றால், 11.19 சதவிகிதம்! இந்த Double Digit வளர்ச்சியை, கடைசியாக எப்போது Achieve செய்தோம் தெரியுமா? 14 ஆண்டுகளுக்கு முன்பு, அதுவும் தி.மு.க. ஆட்சியில்தான்! தமிழ்நாட்டிற்கு எதிராக செயல்படுவதிலும், தி.மு.க. அரசுக்கு குடைச்சல் கொடுப்பதிலும் கவனமாக**

தொடர்ச்சி 2 ஆம் பக்கம்

> **திருவிடந்தையில் நடைபெற்ற**
> **‘என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி’**
> **சென்னை, விழுப்புரம் மண்டல வாக்குச்சாவடிக் குழுவினருக்கான பயிற்சி மாநாட்டில்**
> **கழகத் தலைவர் –**
> ## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!
> 5- ஆம் பக்கம்

Guidance TamilNadu | Bullish on Tamilnadu | வாய்மையே வெல்லும் | SIPCOT | TIDCO

## செயலாக்க மாநாடு 2026

ஒப்பந்தங்கள் நனவாகும் தருணம்

வளமான தமிழ்நாடு.
இலட்சக்கணக்கான கனவுகள் நிஜமாகின்றன.

## From Ink to Impact

அடிக்கல் நாட்டுதல் மற்றும் திறப்பு விழா

12, பிப்ரவரி 2026, | ஐ. டி.சி. கிராண்ட் சோழா, சென்னை.

தலைமை

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

| | 2021 ஆம் ஆண்டு முதல் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் | இதுவரை நனவாக்கப்பட்டத் திட்டங்கள் | இன்றைய மாநாட்டில் நனவாகும் திட்டங்கள் |
|---|---|---|---|
| திட்டங்கள் | 1,179 | 867 | 123 + 2 புதிய திட்டங்கள்* |
| முதலீடுகள் | ₹ 12.37 இலட்சம் கோடி | ₹ 7.91 இலட்சம் கோடி | ₹74,267 கோடி |
| வேலைவாய்ப்புகள் | 36.52 இலட்சம் | 17.84 இலட்சம் | 1.48 இலட்சம் |

* 71 அடிக்கல் நாட்டுதல் | 52 திறப்பு விழா | 2 புரிந்துணர்வு ஒப்பந்தம்



தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் ஒருவரையும் பின்தங்க விடமாட்டோம் !

செ.ம.தொ.இ / 175 / வரைகலை / 2026

tndiprnews | tndipr | tndipr | TN DIPR | www.dipr.tn.gov.in | இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 600 009